நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2021 ஏப்பிறல் 21 | நாணய விதிச் சட்டக் கட்டளை | 2021இன் 01ஆம் இலக்கம்

---

## நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறைக்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்குகள்

உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி வருவாய்களின் நியதிகளில் உயர்ந்த வாய்ப்புக்களைக் கொண்ட பொருளாதார துறைகளை ஊக்குவிப்பதற்கான தேவையினை அங்கீகரிக்கின்ற விதத்தில், பொருளாதாரத்தின் பரந்த அடிப்படையிலான புத்துயிரளிப்பிற்கு வழிவகுக்கின்ற விதத்தில் இலங்கை மத்திய வங்கி, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என குறிப்பிடப்படும்) வழங்கப்பட்ட கொடுகடன் மீது முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்கினைப் பின்வரும் விதத்தில் அறிமுகப்படுத்துகிறது.

1. அதிகாரமளித்தல்

1.1 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) 101(1)(ஆ) பிரிவின் நியதிகளுக்கிணங்க, நாணயச் சபையானது, வர்த்தக வங்கிகளினால் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் அதிகரிக்கப்படக்கூடிய கடன்கள் மற்றும் முதலீடுகளின் தொகை எவ்விதத்தில் அதிகரிக்கப்படலாம் என்பது பற்றி காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கலாம்.

2. முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்கு

2.1 உரிமம்பெற்ற வங்கிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் கொடுகடன் வசதிகளை வழங்கலாம் என்பதுடன் முன்னைய ஆண்டின் இறுதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கலின் வெளிநின்ற இருப்பினை விட ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 20 சதவீதத்திற்குக் குறையாத வளர்ச்சி வீதத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

2.2 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிலுள்ள உள்நாட்டு வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி வருவாய்கள் ஆகிய நியதிகளில் உயர்ந்த வாய்ப்புக்களை எடுத்துக்காட்டிய பின்வரும் பொருளாதார துணைத் துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்:

(i) உணவு மற்றும் குடிபானம் பதனிடல்;

(ii) மருத்துவப் பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகள்;

(iii) தொலைக் கல்வி வசதிகளை அபிவிருத்தி செய்தல்;

(iv) உள்நாட்டுக் குடிசைக் கைத்தொழில்;

(v) இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திகள்;

(vi) கப்பல் மற்றும் படகு கட்டுதல்;

(vii) அழகுசாதனப்பொருட்கள்;

(viii) பத்திக் மற்றும் கைத்தறி;

(ix) இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள்;

(x) சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு;

(xi) இலத்திரனியல் மற்றும் மின்னியல் கூறுகள்;

(xii) உந்து ஊர்திகள் பொருத்தல்;

(xiii) மருந்தாக்கல் தயாரிப்புக்கள்;

(xiv) புறோசலின், மட்பாண்டம், குசவுத் தொழில்.

3. ஏற்புடைத்தன்மை

3.1 கொடுகடன் வசதிகள் காலக் கடன்கள், குத்தகை, மேலதிகப் பற்றுக்கள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள், இலங்கையிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள அனைத்து வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட இலங்கை ரூபா மற்றும் வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்டவை உட்பட வர்த்தக நிதி வசதிகளை உள்ளடக்குகின்றன.

3.2 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பாசல் III இன் கீழான மூலதனத் தேவைப்பாடுகள் தொடர்பான 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளைத் திருத்துவது தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்ட 2020ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தில் வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வரைவிலக்கணத்துடன் இசைந்து செல்லும் விதத்தில், இக்கட்டளைகளின் நோக்கத்திற்காக, ரூ.1,000 மில்லியனை விஞ்சாத ஆண்டுப் புரள்வினைக் கொண்டுள்ள தொழில்முயற்சிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் எனக் கருதப்படல் வேண்டும்.

4. விலக்கல்கள்

4.1 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையிலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உரிமம்பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட அடகுபிடித்தலுக்கான முற்பணங்களும் மேலே 2.1இல் உள்ள முன்னுரிமைத் துறை கடன்வழங்கல் இலக்கிலிருந்து விலக்கப்படல் வேண்டும்.

5. கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல்

5.1 இக்கட்டளைகளின் கீழ், கொடுகடன் வசதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதும் உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்ச்சியான கண்காணிப்புப் பொறிமுறையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.2 உரிமம்பெற்ற வங்கிகள் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கலின் விபரங்கள் பற்றி இணைப்பு I இல் உள்ள படிவத்தில், 2021 ஏப்பிறல் 01 இலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலுமிருந்து 30 நாட்களுக்குள் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளருக்கும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கும் அறிக்கையளித்தல் வேண்டும்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய
வங்கியின் ஆளுநரும்

**இணைப்பு I**

## நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் துறைக்கான கடன்வழங்கல்

| வங்கியின் பெயர் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அறிக்கையிடும் காலம் | | | | | | | |
| வகை | 2020 இறுதியிலுள்ளவாறு ரூ. மில்லியன் | | | அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு ரூ. மில்லியன் | | | ஆண்டின் இன்று வரையான வளர்ச்சி (%) (மொத்தம்) |
| | செயற்படுகின்ற | செயற்படாத | மொத்தம் | செயற்படுகின்ற | செயற்படாத | மொத்தம் | |
| **1. வேளாண்மை, காடாக்கம் மற்றும் மீன்பிடி** | | | | | | | |
| **2. கைத்தொழில் இதில்:** | | | | | | | |
| 2.1 தயாரிப்பு இதில்: | | | | | | | |
| 2.1.1 உணவு மற்றும் குடிபானம் பதனிடல் | | | | | | | |
| 2.1.2 மருத்துவப் பயன்பாட்டுப் பொருட்களின் உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகள் | | | | | | | |
| 2.1.3 உள்நாட்டுக் குடிசைக் கைத்தொழில் | | | | | | | |
| 2.1.4 இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திகள் | | | | | | | |
| 2.1.5 கப்பல் மற்றும் படகு கட்டுதல் | | | | | | | |
| 2.1.6 அழகுசாதனப் பொருட்கள் | | | | | | | |
| 2.1.7 பத்திக் மற்றும் கைத்தறி | | | | | | | |
| 2.1.8 இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் | | | | | | | |
| 2.1.9 இலத்திரனியல் மற்றும் மின்னியல் கூறுகள் | | | | | | | |
| 2.1.10 உந்து ஊர்திகளைப் பொருத்துதல் | | | | | | | |
| 2.1.11 மருந்தாக்கல் தயாரிப்புக்கள் | | | | | | | |
| 2.1.12 புரோசலின் மட்பாண்டம் மற்றும் குசவுத்தொழில் | | | | | | | |
| 2.1.13 ஏனையவை (குறிப்பிடவும்) | | | | | | | |
| 2.2 கட்டடவாக்கம் | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3. பணிகள் இதில்: | | | | | | | |
| 3.1 சுற்றுலா | | | | | | | |
| 3.2 போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் | | | | | | | |
| 3.3 மொத்த விற்பனை மற்றும் வர்த்தகம் | | | | | | | |
| 3.5 தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொடர்பூட்டல் | | | | | | | |
| 3.6 தொழில்சார், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் நடவடிக்கைகள் | | | | | | | |
| 3.7 கல்வி இதில்: | | | | | | | |
| 3.7.1 தொலைக்கல்வி வசதிகளை அபிவிருத்தி செய்தல் | | | | | | | |
| 3.8 சுகாதாரக் கவனிப்பு, சமூக சேவைகள் மற்றும் ஆதரவுப் பணிகள் இதில்: | | | | | | | |
| 3.8.1 சுகாதாரம் மற்றும் நலம் | | | | | | | |
| 4. ஏனையவை (குறிப்பிடுக) | | | | | | | |
| **நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறைக்கான மொத்தக் கடன்வழங்கல்** | | | | | | | |
| **தனியார் துறைக்கான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்** | | | | | | | |
| தயவுசெய்து பின்வருவனவற்றிற்கு மின்னஞ்சல் செய்யவும் | | | | | | | |
| • **பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்,** பணம் மற்றும் வங்கித்தொழில் பிரிவு - money&banking@cbsl.lk | | | | | | | |
| • **வங்கி மேற்பார்வைத் திணைக்களம்,** தரவுத் தளம் - bsddb@cbsl.lk | | | | | | | |